மாகாணக் கல்வி திணைக்களம் சபரகமுவ – வார பாடசாலை

வாரம் 07

பாடம் - கர்நாடக சங்கீதம்

தரம் - 13

செல்வி செல்லையா சிவநந்தனி

ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்

# கர்நாடக இசை, ஹிந்துஸ்தானி இசைகளின் ஒற்றுமை , வேற்றுமைகள்

1. கர்நாடக இசை, ஹிந்துஸ்தானிய இசை பிரிவுகள் பற்றி முதன் முதலில் கூறப்பட்ட நூல் யாது?
2. அந்நூலை இயற்றியவர் யார்?
3. இவ்விரு இசை முறைமைக்குமான பொதுவான அம்சங்களைத் தருக.
4. ஹிந்துஸ்தானிய இசையில் ஆரம்ப அப்பியாசகான வரிசைகள் கற்பிக்கப்படும் முறையைத் தருக.
5. ஹிந்துஸ்தானிய இசையில் காணப்படும் 10 தாட்களையும் அவற்றிற்கு இணையான கர்நாடக இசை இராகங்களையும் தருக.
6. கர்நாடக இசையின் 12 ஸ்வரஸ்தானங்களையும் ஹிந்துஸ்தானி இசையில் அவற்றிற்கு வழங்கும் பெயர்களையும் தருக.
7. ஹிந்துஸ்தானி இசையில் காணப்படும் ஔடவ, ஷாடவ இராகங்களுக்கு உதாரணங்கள் தருக.
8. ஹிந்துஸ்தானி இசை வழக்கில் உள்ள உருப்படிகளைத் தருக.
9. கர்நாடக இசை உருப்படிகளின் பல்லவி, அனுபல்லவியை ஹிந்துஸ்தானி இசையில் எவ்வாறு அழைப்பர்?
10. ஹிந்துஸ்தானி இசையில் மந்திரஸ்தாயி, மத்தியஸ்தாயி, தாரஸ்தாயி ஆகிய ஸ்தாயிகளை எவ்வாறு அழைக்கப்படுகிறது?
11. ஹிந்துஸ்தானி இசையில் பின்பற்றும் 3 கரானாக்களைத் தருக.

12. பின்வரும் கர்நாடக இசைக்கு ஒப்பான ஹிந்துஸ்தானி உருப்படிகளைத் தருக.
    ஜாவளி- பதம்- தில்லானா-

13. ஹிந்துஸ்தானி இசையிலிருந்து கர்நாடக இசைக்கு வந்த தாளத்தினை தருக.

14. காலாட்ஷேபம் செய்யும் முறையானது தஞ்சாவூரில் அறிமுகப்படுத்தப்பட்ட நூற்றாண்டு யாது?

15. தற்காலத்தில் மெல்லிசை , திரை இசைகளில் பயன்படுத்தப்படும் ஹிந்துஸ்தானி இசைக்கருவிகள் எவை?

16. ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் இருந்து கர்நாடக சங்கீதத்திற்கு வந்த இராகங்கள் ஐந்தினைத் தருக.

17. ஜுகல்பந்தி என்றால் என்ன?

18. முத்துஸ்வாமி தீட்சிதரால் பயன்படுத்தப்பட்ட ஹிந்துஸ்தானி இராகங்கள் எவை?

19. ஹிந்துஸ்தானி இசையில் பயன்படுத்தப்படும் பிரதான தாள வாத்தியம் யாது?

20. பின்வரும் ஹிந்துஸ்தானி இராகத்திற்கு ஒப்பான கர்நாடக இராகங்களைத் தருக.

    - பூப்
    - திலங்
    - பாகேஶ்ரீ
    - தேஷ்
    - அஹிர்பைரவ்
    - துர்கா
    - பூபாலி தோடி
    - சுத்த கல்யாண்
    - பைராகி பைரவ்
    - ஶ்ரீ